


தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஹாக்கி இந்தியா இணைந்து நடத்தும் 14ஆவது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பை போட்டியில் பங்கேற்றுள்ள நியூசிலாந்து அணி வீரர்கள் மற்றும் நிர்வாகிகள் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் உள்ள உலகப் புகழ்பெற்ற 106 அடி உயர சிற்பத்தேரின் முன்பாக தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடன் நேற்று முன்தினம் (8.12.2025) குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, சர்வதேச ஹாக்கி சம்மேளனத் தலைவர் டத்தோ தயாப் இக்ரம், இந்திய ஹாக்கி சங்கத் தலைவர் திலீப் திர்கி, செயலாளர் போலாநாத் சிங், பொருளாளர் சேகர் ஜெ.மனோகரன், இயக்குநர் (பொது) கமாண்டர் ஆர்.கே.ஸ்ரீவத்சவா ஆகியோர் உள்ளனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.12.2025) சென்னை தனியார் வணிக வளாகத்தில் 12 நாடுகள் பங்குபெறும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் 2025 ஸ்குவாஷ் உலக கோப்பை சென்னை, போட்டிக்கான கோப்பையை அறிமுகம் செய்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, உலக ஸ்குவாஷ் சம்மேளனத் தலைவர் செனா ஊல்ட்ரிட்ஜ், இந்திய ஸ்குவாஷ் ராக்கெட் சம்மேளனத் தலைவர் அனில் வாத்வா, தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் சங்கத்தின் புரவலர் என். ராமச்சந்திரன், ஐரோப்பிய ஸ்குவாஷ் சம்மேளனத் தலைவர் தாமஸ் ட்ரொட்சன் மற்றும் ஸ்குவாஷ் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர்.

## சென்னை மண்டல

# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஆய்வு!

## அமைச்சர் – முனைவர் கோவி.செழியன் மேற்கொண்டார்!

சென்னை, டிச.10 -

உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் நேற்று முன்தினம் (08.12.2025) சென்னை மண்டல அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்லூரி விடுதிகளின் கட்டமைப்பு வசதிகள், புதியப் பாடப்பிரிவுகளில் மாணாக்கர்களின் சேர்க்கை, நிறுவன மேலாண்மை குழு நடவடிக்கைகள் மற்றும் மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை, காயிதே மில்லத் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தலைமையில், உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ. சங்கர் இ.ஆ.ப., மற்றும் கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி எ. சுந்தரவல்லி இ.ஆ.ப., முன்னிலையில், சென்னை மண்டலத்திற்குட்பட்ட அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளின் முதல்வர்களுடன் கல்லூரி மற்றும் கல்லூரி விடுதிகளின் கட்டமைப்பு வசதிகள், புதியப் பாடப்பிரிவுகளில் மாணாக்கர்களின் சேர்க்கை, நிறுவன மேலாண்மைக் குழு நடவடிக்கைகள் மற்றும் மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

முன்னதாக, சென்னை மண்டலத்திற்குட்பட்ட இராணி மேரி கல்லூரியில் மாணவியர்கள் விடுதி, மாநிலக் கல்லூரியில் மாற்றுத்திறனாளி மாணாக்கர்களுக்கான விடுதிகளின் அடிப்படை வசதிகள், கட்டமைப்பு வசதிகள், மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் உணவுகளின் தரம் மற்றும் ரூ. 63 கோடியில் அமைக்கப்பட்டு வரும் கலைஞர் அரங்கத்தின் கட்டுமானப் பணிகள் ஆகியவற்றை நேரடியாக ஆய்வு செய்தார். மேலும், மாணாக்கர்களிடம் அரசால் வழங்கப்பட்டு வரும் நலத்திட்ட உதவிகள் குறித்தும், விடுதிப் பராமரிப்பு கோரிக்கைகள் குறித்தும் கலந்துரையாடினார். ஆய்வின்போது, மாணாக்கர்களின் கோரிக்கையை ஏற்று உணவு வகையில் மாற்றம் செய்திட உத்தரவிட்டும் மற்றும் கூடுதல் குடிநீர் வசதி ஏற்படுத்தித் தர உடனடியாக நடவடிக்கை எடுக்க சார்ந்த அலுவலருக்கு உத்தரவிட்டார். மாநிலக் கல்லூரியில் 1973-1975ஆம் ஆண்டு கல்லூரிப் பயின்ற முன்னாள் மாணாக்கர்கள் பொருளியல் துறைக்கு நன்கொடையாக வழங்கிய நவீன வகுப்பறையினை (Smart Class) மாணாக்கர்களின் பயன்பாட்டிற்காக உயர்கல்வித் துறை அமைச்சர் திறந்து வைத்தார்.

மேலும், வியாசர்பாடி டாக்டர் அம்பேத்கர் அரசுக் கலை கல்லூரியில் மாணாக்கர்களின் பயன்பாட்டிற்காக புதிதாக கொள்முதல் செய்யப்பட்ட மேசைகள், நாற்காலிகள் மற்றும் இதர தளவாடப் பொருட்களையும் ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து, அண்ணா சாலையிலுள்ள காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரியில் சென்னை மண்டலத்திற்குட்பட்ட அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளின் முதல்வர்களுடன் மாணாக்கர் சேர்க்கை, கல்லூரி விடுதிகள் கட்டமைப்பு வசதிகள், புதியப் பாடப்பிரிவுகள் மற்றும் நிறுவன மேலாண்மைக் குழு நடவடிக்கைகள் குறித்தும், 2021 2025 வரை தொடங்கப்பட்ட பாடப்பிரிவுகளில், மாணாக்கர்களின் சேர்க்கை விவரங்கள், கடந்த மூன்று ஆண்டுகளின் மாணாக்கர்களின் தேர்ச்சி விவரங்கள், ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்களின் விவரங்கள், கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் விடுதிகள் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்தும், “நான் முதல்வன்”, “புதுமைப்பெண்”, “தமிழ் புதல்வன்” மற்றும் இதர அரசு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவது, போதை ஒழிப்புச் சங்கத்தின் செயல்பாடுகள், உள் புகார் குழு, நிறுவன மேலாண்மைக் குழு மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் பாலின உளவியல் குழுவின் செயல்பாடுகள் குறித்தும் கல்லூரி முதல்வர்களிடம் உயர்கல்வித் துறை அமைச்சர் கேட்டறிந்தார்.

இக்கூட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் பேசியதாவது:

அரசுக் கல்லூரிகளிலும் மாணாக்கர் சேர்க்கையினை அதிகரித்து, ஒப்பளிக்கப்பட்ட இடங்களை முழுமையாக நிரப்பி, மாணாக்கர்கள் நூறு சதவீதம் தேர்ச்சி பெறுவதற்கான அனைத்து முயற்சிகளையும் கல்லூரி முதல்வர்கள் மற்றும் அனைத்து பேராசிரியர்களும் மேற்கொள்ள வேண்டும். தற்போதுள்ள தொழில்நுட்பத்திற்கு ஏற்ப மாணாக்கர்களுக்கு வேலைவாய்ப்பு பெற வழிவகுக்கும் புதியப் பாடப்பிரிவுகளைத் தேர்ந்தெடுத்து அதனை கல்லூரிகளில் தொடங்குவதற்கு உரிய கருத்துருக்களை கல்லூரி கல்வி ஆணையர் வழியாக அரசுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்களான “நான் முதல்வன்”, “புதுமைப்பெண்”, “தமிழ் புதல்வன்” மற்றும் இதர அரசு திட்டங்களின் பயன்கள் முழுமையாக அனைத்து மாணாக்கர்களுக்கும் சென்றடையத் தேவையான அனைத்து பணிகளையும் மேற்கொள்ள வேண்டும். கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களின் எதிர்கால நலன் கருதி முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க தொடங்கப்பட்டு, செயல்பட்டு வரும் நிறுவன மேலாண்மைக் குழுவினைக் கொண்டு கல்லூரிகளுக்கும், மாணாக்கர்களுக்கும் தேவையான நல உதவிகளைப் பெறுவதற்கு உரிய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். தமிழ்நாடு “போதை இல்லா மாநிலமாக” விளங்கிட கல்லூரிகளில் செயல்பட்டு வரும் போதை ஒழிப்புச் சங்கத்தின் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி முழு ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டும். அதேபோல் கல்லூரியில் பணியாற்றும் அனைத்து பெண் பணியாளர்களின் நலன் காக்கும் வகையில் உள் புகார் குழுவினை சிறப்பான வகையில் செயல்படுத்த வேண்டும், மாணவிகளுக்கு உரிய கால இடை வெளியில் வல்லுநர்களைக் கொண்டு பாலின உளவியல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும்.

மேலும், கல்லூரி மற்றும் விடுதிகளின் கட்டமைப்பு வசதிகள் குறித்து அவ்வப்போது ஆய்வுகள் நடத்தி, தேவையான உட்கட்டமைப்பு வசதிகளின் கருத்துக்களை உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும். கல்லூரிகளில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் குறித்து தலைமையிடத்திற்கு உரிய கால இடைவெளியில் தெரியப்படுத்தி கட்டமைப்பு வசதிகளில் எவ்வித குறைபாடும் இல்லாததை உறுதி செய்ய வேண்டும். முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க தொடங்கப்பட்டுள்ள முன்னாள் மாணாக்கர்கள் சங்கத்தில் முன்னாள் மாணாக்கர்களை அதிகளவில் உறுப்பினராகச் சேர்த்து கல்லூரியின் வளர்ச்சிக்கும், பயிலும் மாணாக்கர்களின் முன்னேற்றத்திற்கும் தேவையான உதவிகளைப் பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், கடந்த இரண்டு மாதங்களாக கல்லூரி முதல்வர்களுக்கு வழங்கப்பட்ட நிர்வாகப் பயிற்சியினை தங்களின் அன்றாடப் பணிகளில் செயல்படுத்த வேண்டும். மாணாக்கர்களின் நலனில் முழு அக்கறையுடனும், அர்ப்பணிப்புடனும் பேராசிரிய பெருமக்களாகிய நீங்கள் திறமையாகப் பணியாற்றி அவர்களின் வளமான எதிர்காலத்திற்கு வழி காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் பேசினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் இணை இயக்குநர் (தி(ம)வ) முனைவர் சிந்தியா செல்வி, இணை இயக்குநர் (நிர்வாகம்) முனைவர் இரா.இராமன், சென்னை மண்டல இணை இயக்குநர் முனைவர் க.சுடர்க்கொடி, சென்னை மாநிலக் கல்லூரி, இராணி மேரி கல்லூரி, பாரதி மகளிர் கல்லூரி, நந்தனம் அரசுக் கலை கல்லூரி, காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி, டாக்டர் அம்பேத்கர் அரசு கலை கல்லூரி, ஆர்.கே. நகர், திருவொற்றியூர், ஆலந்தூர், நெம்மேலி, பெரும்பாக்கம் அரசுக் கலை கல்லூரிகள் மற்றும் சைதாப்பேட்டை கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம், விலிங்டன் சீமாட்டி கல்வியியல் கல்லூரிகளின் முதல்வர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## கர்நாடகாவிலிருந்து தமிழ்நாட்டுக்குள் நுழையும் கழிவு நீரால் ஏற்படும்

# பாதிப்புகளைத் தடுக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

## மக்களவையில் – தயாநிதி மாறன் கேள்வி!



சென்னை, டிச. 10 -

கர்நாடகாவிலிருந்து தமிழ்நாட்டுக்குள் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் தென்பெண்ணை ஆற்றில் வெளியேற்றப்படுவது குறித்து ஒன்றிய அரசுக்கு தெரியுமா? தமிழ்நாட்டுக்குள் தினசரி நுழையும் கழிவுநீரின் அளவு என்ன? இந்த கழிவு நீரால் தமிழ்நாட்டுக்கு உட்பட்ட கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகியவற்றில் ஏற்படும் பாதிப்பு அதன் நச்சுத்தன்மை பொது சுகாதார ஆபத்துகள் உள்ளிட்ட விவரங்கள் என்ன? என்று நாடாளுமன்றத்தில் ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சருக்கு மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும் திமுக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவருமான தயாநிதிமாறன் கேள்வி எழுப்பினார். மேலும் தமிழ்நாட்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர், வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாக்க மாசுபாடு ஏற்படுவதைத் தடுக்க தேசிய ஆறு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகள் அமலாக்க நடவடிக்கைகள் என்ன? என்பன போன்ற பல கேள்விகளையும் எழுப்பினார்.

அதன் விவரங்கள் வருமாறு :

கர்நாடகாவிலிருந்து சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் வெளியேற்றப்படுவது குறித்து ஒன்றிய அரசுக்கு தினசரி கலக்கப்படும் கழிவுநீரின் மதிப்பிடப்பட்ட தென்பெண்ணை ஆற்றில் தெரியுமா? ஆற்றில் அளவு என்ன?

தமிழ்நாட்டுக்குள் தினசரி நுழையும் கழிவுநீரின் அலுவல் ரீதியிலான மதிப்பீடு மற்றும் கீழ்நோக்கிய மாவட்டங்களான கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகியவற்றில் ஏற்படும் தாக்கம் நச்சு நுரை உருவாக்கம் நீர் மாசுபாடு பொது சுகாதார ஆபத்துகள் உள்ளிட்ட விவரங்கள் என்ன?

தென்பெண்ணை ஆற்றில் கழிவுநீர் வெளியேற்றத்தைத் தடுப்பது தொடர்பான தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (NGT) உத்தரவுகளை கர்நாடகா அரசும் ஒன்றிய அரசும் பின்பற்றிய நிலை சமர்ப்பிக்கப்பட்ட; நடவடிக்கை எடுக்கப்பட்ட அறிக்கைகளின் தேதிகள் உள்ளிட்ட விவரங்கள் என்ன?

மாநில நுழைவுப் பகுதிகளிலும் கீழ்நோக்கிய நீர்த் தேக்கங்களிலும் நீரின் தரப் பரிசோதனை அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளதா அல்லது மறு ஆய்வு செய்யப்பட்டுள்ளதா? மறு ஆய்வு செய்யப்பட்டிருந்தால் அதன் விவரங்கள் தற்போதைய நிலை என்ன?

தமிழ்நாட்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர், வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாக்க மேலும் மாசுபாடு ஏற்படுவதைத் தடுக்க தேசிய ஆறு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகளும் அமலாக்க நடவடிக்கைகளும் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினர்.

# வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. சிறப்புரை!

வேலூர், டிச. 10 -

வேலூர் தெற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட திமுக அலுவலகத்தில் நடந்தது.

கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளராக தெற்கு மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

எம்எல்ஏ, குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மாவட்ட துணை செயலாளர் முனைவர் எம். பிரபாத்குமார், ஒன்றிய செயலாளர்கள் சி.எல். ஞான சேகரன், என்.கஜேந்திரன் மற்றும் அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தேர்தல் ஆணையம் கொடுக்கப்பட்ட ஒரு மாதத்திற்குள் வேலூர் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட 87 வாக்குச்சாவடிகளிலும் திறம் பட பணியாற்றிய அனைத்து நிர்வாகி களுக்கும் நன்றி தெரிவிப்பது, வருகிற டிசம்பர் மாதம் 14ஆம் தேதி திருவண்ணாமலையில் நடைபெறும் வடக்கு மண்டல இளைஞர் அணி மாநாட்டில் கட்சியின் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கிறார். இதில் வேலூர் தெற்கு மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் திரளாக கலந்து கொள்வது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்ற ப்பட்டன.



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ பரப்புரை குறித்து மாவட்ட செயலாளர்கள் கூட்டம் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது. கடலூர் கிழக்கு மாவட்டக் கூட்டத்தில் அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர் செல்வம் முன்னிலை வகித்தார். காட்டுமன்னார்கோயில் எம்.ஆர்.கே.கலையரங்கத்தில் மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி , தலைமைக் கழகத் தொகுதி பார்வையாளர்கள், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாவட்டக் கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், மாவட்டக் கழக தொகுதி பொறுப்பாளர்கள் மற்றும் மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி மூலமாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, அரகண்டநல்லூர் பேரூராட்சியில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கத்திற்கு அடிக்கல் நாட்டினார். அதனைத் தொடர்ந்து கழக துணை பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ பணியினை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, ம.ஜெயச்சந்திரன், மு.தங்கம், அப்துல் சலாம், ஜி.ரவிச்சந்திரன், அ.சா.ஏ.பிரபு, பி.வி.ஆர்.சு.விசுவநாதன், S.லூயிஸ், கல்பட்டு வி.இராஜா, R.முருகன், RP.முருகன், ஜெய.ரவிதுரை, வேம்பி.ரவி, ஜெ. ஜெயபால், கில்பர்ட் ராஜ், பேரூராட்சி தலைவர் ராயல் அன்பு, தனலட்சுமி உமேஷ்வரன், ஓம்சிவசக்திவேல், கோபிகிருஷ்ணன், சுந்தரமூர்த்தி, பூக்கடை கணேசன், நைனா முகம்மது மற்றும் பலர் உடனிருந்தார்கள்.